வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

அவர்கள் இயற்றிய

நூற்றொகுதி

இரண்டாம் பகுதி

முடிவுறாத பிரசுரங்கள்.

1. முத்திராராட்சசம்

வெளிவராத சில பிரசுரங்கள்

௧. தமிழ்மகண் மேகலை.

௨. நாமகள் சிலம்பு.

௩. இன்பவல்லி.

௪. கலாநிதி.

௫. ஞானதரங்கிணி.

இவ்வைவகை நூற்றொகைகளுக்கும் பதிப்பாசிரியர் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் **வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்,** *பி. ஏ.,*

௧. தமிழ்மகண்மேகலை:

கிங்கிணி: ௭: உமைதிருமணம்—1.

இது வடமொழியிற் காளிதாஸ மஹாகவி இயற்றிய குமார சம்பவத்தின் முதலேழு சருக்கத்தின் மொழிபெயர்ப்பாகும். இச் செய்யுணூல் **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., யாத்தது; விலை ரூ. 1—0—0. விரைவில் வெளிவரும்.*

கிங்கிணி: ௮: அவ்வைக்காட்சி—2.

இது புதுவழியால் யாக்கப்பட்டுளதோர் இனிய செய்யுணூல்; மெய்க்கோள் பல விளக்குவது. **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., இயற்றியது; விலை அணா 0—12—0; விரைவில் வெளிவரும்.*

௨. நாமகள் சிலம்பு:

பரல்: ௭: சூர்ப்பணகை—3.

இது பிரகசனம் என்னும் ஒருவகை நாடகம். ஈரங்கமுள்ளது; நகைச்சுவை பெரிதும் வாய்ந்தது; எத்தகையோரும் படித்துக் களிகூறத்தக்கது; **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., இயற்றியது; விலை அணா 0—6—0; விரைவில் வெளிவரும்.*

பரல்: ௧௰: முத்திரா ராட்சசம்—4.

இது வட மொழியினின்றுந் தமிழில் மொழிபெயர்த்ததோர் நாடகம்; ஏழங்கமுள்ளது; **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., இயற்றியது; விலை அணா 0—12—0; விரைவில் வெளிவரும்.*

௩. இன்பவல்லி :

மலர்: ௯: இன்னுமா—5.

இஃது இனிமையும் புதுமையும் வாய்ந்ததோர் தமிழ்க் கதை; யாவர்க்கும் விளங்கத்தக்கவாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுளது; **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., இயற்றியது; விலை அணு 0—8—0; விரைவில் வெளிவரும்.*

௪. கலாநிதி :

கலை: ௧ம்: இழிசினர் வழக்குரை வரையறை—6.

இஃது ஆந்திரமொழியில் வேதம் வேங்கடராய சாஸ்திரியாரவர்கள் செய்ததினின்றும் மொழி பெயர்த்துச் செய்யப்பட்டது; நாடகங்களில் இழிசினர் வழக்குரை வழங்கு மாற்றைத் தெளிவுறக் காட்டுவது; நல்ல நடையில் எழுதப்பட்டுளது. **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., இயற்றியது; விலை அணு 0—4—0; விரைவில் வெளிவரும்.*

௫. ஞானதரங்கிணி :

தரங்கம்: ௯: வித்தியாவிருத்தி—7.

இது சிவ வித்தையைத் தெளிவுறக் கூறுவதோர் அரிய ஞான நூல். வடமொழியினின்று **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** *பி. ஏ., மொழி பெயர்த்தியற்றியது; விலை ரூ. 1—0—0;* **விரைவில்** *வெளிவரும்.*

*மேற்காட்டிய 7 பிரசுரங்களும் வெளிவருமென்று பிரசுரித்திருந்தபோதிலும், '***முத்திரா ராட்சசம்***' என்ற நூலில் ஒரு பகுதி தவிர மற்றவை எவர் கையகப்பட்டு மறைந்தனவோ, கடவுளேயறிவார்.*

முத்திராராட்சசம்

தற்சிறப்புப் பாயிரம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

உலகமெலா முவந்தேத்து மொருமுதலை
யுன்னியெந்தை யொளிருந் தாளெந்
தலைமிலைந்து சபாபதிச்செந் தமிழரசான்
றனைவாழ்த்தித் தமிழ் நூலாக
நலமிளிரும் வடமொழியின் முத்திரா
ராட்சசநன் னாடகத்தைப்
புலமைசெறி விசாகதத்தன் புனைந்ததனை
மொழிபெயர்த்துப் புகல் கின்றுமே. (1)

வாழ்த்து

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

பொன்முடி வாழும் பெண்ணிவள் யார்கொல்
பொலிசசி கலையினுள் பெயரென்
சொன்மதி யதுவே யதன்பெய ரறிந்துஞ்
சொல்லென னிமறந் தெவனோ
வின்மதி யன்றிவ் வஞ்சியைக் கேட்டேன்
விசயை சொல்வாள்பிறை யலதேற்
றன்மனைக் கினணங் கங்கையைக் கரப்போன்
சதுர்மொழி காக்கநந் தமையே. (2)

இதுவு மது

ஒளிர்கழ றம்மா னிலமதோ கதியை
யுறுமெனுப் பையவுங் கடக
மிளிர்தன கரங்க ளவிநயந் தெரிப்பான்
மிசையுயர்த் துழியெலா வுலகுந்
தளிர்தரு மென்னக் குறுக்கியும் விழியார்
சகமிறு மெனச்சின மின்றுப்
புளகமார் புராரி தயங்கியுட் கூசிப்
புலிநடம் புரக்கநந் தமையே. (3)

முன்னுரை

சூத்திரதாரன்:— (ஒருபுறம் நோக்கி) அதனுடன் அமைக. மிகை படக்கூறேல். (திரும்பி) இப்பொழுது **சியாமந்தவடேசுவரன்** றன்பேரனும், பிருதுவின் மகனுமாகிய **விசாகதேவ கவிஞன்** இயற்றிய **முத்திராராட்சசப்** பெரிய நாடகத்தினை யாடும்வண்ணம் சனங்களால் ஆணையிடப்பெற்றுளேன். ஆதலின் ..என்பால் நிகழும்

அவிநயங்கண்டு, காப்பியச் சிறப்பொருங்குணர்ந்த காணுநர் யாவரும் களிசிறப்பாரென்பது மெய்யே. (பாடுகின்ருன்)

தன்னிடம் வித்திடத் தக்க தோர்விதை
யென்னவள் விதைப்பினு மினிதி ரேங்குவா
னன்னில மவனிய் னுட லின்றியே
மன்னெழில் வளம்பெற வளர்க்கு மேயரோ (4)

இப்போது யான் வீட்டிற்குச்சென்று எனது இல்லாளை யழைத்துக்கொண்டு வந்து அவளுடன் யான் சங்கீதகஞ் செய்யப் போகின்றேன். (சிறிது சென்று பார்த்து) என்றன் வீட்டிற்குட் செல்லுகின்றேன். (அவிநயஞ் செய்துகொண்டு நுழைந்து பார்த்து வந்து தனக்குள்) ஏடி! நமது வீட்டிற்குளேதோ பெரிய திருவிழாப் போலக் காணப்படுகின்றதே! அஃதின்றியுஞ் சேவகர்களும் தந்தம் தொழில்களைப் பரபரப்புடனே செய்கின்ருர்களே! இஃதென்னை கொல்? (பாடுகின்ருன்)

சிலர்

தண்ண நீர் கொடு தாம் வரு வார்சிலர்
சன்னிப் பாள் பணச் சாந்தரைப் பார் சிலர்
க்ண்ணி லாந் தொடை கட்டுகிற் பார் சிலர்
சுண்ண மும் மொலி தோன்ற வி டிப்பரே (5)

இருக்கட்டும் இதைக்குறித்து என் மனைவியை யழைத்துக் கேட்பேன். (நேபத்தி யத்தினுள்ளே யொருபுறம் நோக்கி) குணவதி! தந்திரசரஸீ! தேகசௌக்கியஞ் செய்யவல்லாளே! அறம்பொருளின்ப மாக்குகிற்பாளே! இல்லாண்மை முற்றும் இனி துணர்ந்தாளே! ஒரேயொரு காரியத்தின் பொருட்டுச் சீக்கிரம் வா!

நடி வருகின்ருள்

நடி:— ஆரியபுத்திரா! இதோ இருக்கின்றேன்; நினது ஆணையை யேற்று அதன்படி செய்வேன்.

சூத்திரதாரன்:— அவ்வாணை நிற்க. மற்று இப்போது பெரியோர்களாகிய பிராமணர்களை யழைப்பதற்கு நமது குடும்பத்தின் கட்காரணமாயிருப்பது யாரோ? அல்லாக்கால், இச்சிறந்த விருந்தினர் நந்தம் மடைத்தொழிற் சிறப்பை யுணர்ந்து இங்கே வந்தனரோ? சொல்.

நடி:— ஐய! இச்சிறந்த பிராமணர்களை யானே யழைத்தேன்.

சூத்திரதாரன்:— காரணமென்னை? சொல்

நடி:— இன்று சந்திரகிரகண மன்ருே?

சூத்திரதாரன்:— உனக்கிப்படி யார் சொன்னுர்கள்?

நடி:— *இப்படியிவ் வூரார் சொல்லிக்கொண்டார்கள்.*

சூத்திரதாரன்:— *ஆரியே! அறுபத்துநாலு கலைகளு மொன்ருகிய சோதிட நூலில் யான் மிகவும் பயின்றிருக்கின்றேன். இடையே, பெரியோர்களாகிய பிராமணர்களைக் கருதி செய்யும் அடிசிற்ருெழில்களுமாகட்டும். மற்றைப்படி இன்று சந்திரகிரகணமென்று சொல்லி யாரோ உன்னை யேய்த்துவிட்டனர்! பார்! (பாடுகின்ருன்)*

சூழ்மதிப் பிறையதாய்ச் சுடருஞ் சந்திரற்
கீழ்மைய கொடியகோட் கேது வோ டுறீஇத்
தாழ்மைய வலிகொடுதாக்குவோ னெவன்?—

நேபத்தியத்துள்:— *யானிருக்கும் போது சந்திரனைத் தனது வலியினுல் தாக்க விரும்புவோன் யார்?*

சூத்திரதாரன்:— *(பாடுகின்ருன்)*

வாழ்மதி புதனெடு வதியி லுய்வனே. (6)

நடி:— *ஐய! இவ்வுலகிலிருந்து சந்திரனைக் (கேதுக்) கோளின் தாக்குதலினின்றுங் காக்க விரும்புவோன் யார்?*

சூத்திரதாரன்:— *அதனை யானுங் கண்டிலேன்; மெய்யே. அது நிற்க. அவன் மீட்டுஞ் சொல்வானுல் அவனது குரலினுல் அவனைத் தெள்ளி தினுணர்வோம். (பாடுகின்ருன்)*

சூழ்மதிப் பிறையதாய்ச் சுடருஞ் சந்திரற்
கீழ்மைய கொடியகோட் கேது வோ டுறீஇத்
தாழ்மைய வலிகொடு தாக்குவோ னெவன்?

நேபத்தியத்துள்:— *யானிருக்கும்போது சந்திரனைத் தனது வலியினுல் தாக்க விரும்புவோன் யார்?*

சூத்திரதாரன்:— *(கேட்டு) யானறிவேன். கௌடில்லியன்! (நடி பயந்து நிற்கின்ருள்; சூத்திரதாரன் பாடுகின்ருன்)*

எவன்றன் வெகுளித் தீயதனு
லொழில்கொ ணந்த குலமெரித்தா
னவன்றன் குடில மதியினகத்
தைய மதிக்கி ரகணமென
நுவன்ற சொற்கேள் விப்படலு
நுண்மௌ ரியசந் திரகுத்த
னவன்றன் பகைஞர் தாக்கலென்ருே
ரரிய பொருளுட் கொண்டனனே

ஆகவே நாம் போவோம். (7)

[இருவருஞ் செல்லுகின்றனர்.]

அங்கம்—I முதற்களம்

(சாணக்கியன் தன் குஞ்சியை விரித்துக் கையினாலதை யுருவிக் கொண்டு வருகின்றான்)

சாணக்கியன்:— யான் இருக்கும்பொழுது தனது வலிகொண்டு சந்திரகுப்தனைத் தாக்குவதற்கு விருப்பங் கொள்பவன் யாவன்? சொல். (பாடுகின்றான்)

கூய வேழத்தைக் கொன்றிழி சோரிபே
ராய வாய்மடுத் தல்கந்திச் செம்மதிச்
சீய வாயிற் செழிபற் பிடுங்கிட
மேய சிந்தை விரும்புநன் யார்கொலோ? (8)

மேலும், (பாடுகின்றான்)

நந்தர் தங்குலத் திற்குமா விடஞ்செறி நாக
நந்து கோபச்செந் தீவளர் நற்புகைக் கொடியென்
விந்தை யார்சிகை விரிந்திடல் விழைதர லின்றிப்
புந்தி யற்றுத்த னுயிரினைப் போக்குவோன் யாரே? (9)

அன்றியும், (பாடுகின்றான்)

கோனந் தக்குலக் கானங் கொளுத்துமென்
மான் மார்சின வாளெரி யூடுபோய்த்
தானந் தம்முற்றுச் சாவுஞ் சலபம்போ
லான மெய்துமா றுள்விழை மூடன்யார்?

சார்ங்கரவா! சார்ங்கரவா!

மாணவன் வருகின்றான்

மாணவன்:— ஐயா! உத்தரவிடுக.

சாணக்கியன்:— மைந்த! யான் வீற்றிருக்க விரும்புகின்றேன்.

மாணவன்:— ஆசிரிய! வாயிலருகிலுள்ள அவைகுழுமிடத்தில் ஒரு பிரப்பிருக்கை யுளது. அது தாங்கள் வீற்றிருக்கத் தக்கது.

சாணக்கியன்:— மைந்த! மிகத் தலைமையான சில தொழில்களில் முயன்று மனமுளையா நின்றேன்; மற்று மாணாக்கர் கீழ்ப்படியாமை யினா லன்று. (ஓராதனத்திலிருந்து தனக்குள்) இந்தச் செய்தி யெவ் வாறு சனங்களுக்கு வெளியாயிற்று? இராட்சசனோ நந்தகுலம் அழிந்ததனாற் கோபங்கொண்டு, பருவதகேசனாகிய தன், தகப்பன் கொலையுண்டதனால் முன்னரே வெகுண்டுள மலயகேதுவையடுத்து "உன்னை நந்த ராச்சிய முழுதிற்கும் மன்னவனாக்கி உனக்குப் பட்டங் கட்டுவேன்" என்று சொல்லி, அப்படிச் சொல்லியதனை முற்றுவிக் கும்படி பல மிலேச்ச ராசகர்களைத் துணை வலியாகக் கொண்டு விருஷலனாகிய சந்திரகுப்தனைத் தொலைக்க விரும்புகின்றான். மற்று நந்த வமிசத்தைத் தொலைக்குமாறு யான் செய்த பிரதிஞ்ஞையோ

உலகம் முழுவதும் அறிந்ததே. அவ்வாறே கடத்தற் கரிய பிரதிஞ்ஞை யென்னும் யாற்றினையுங் கடந்தேன். அது நிற்க, உலகம் அறிந்த இச் செய்தியை அவர்கள் மறக்கும்படி செய்ய எனக்கு வல்லமை யில்லையோ?— (மௌனம்). இஃதெனக் கேன்? (பாடுகின்றான்)

நந்தகுலக் கானையென் றன் வெகுளிச் செந்தீ
நனிமடுத்துத் துயர்மேக நண்ணார் மாத
ரிந்துமுகந் தமைக்கரிய வாக்கி யென்ற
னிருஞ்சூழ்ச்சிக் காற்றினொடூஉ மடமை நீற்றான்
மந்திரிமா ரெனுமரங்க டம்மைமூடி
வாழ்ந்தசனப் பறவைகளைக் கலக்கியோட்டி
நந்துவதோய் தவினன்று பற்றி மேன்மே
னலிவின்றி யெரியவிட னின்மை யானே. (11)

ஏவலர்மன் னவர்க்கஞ்சி யுயிருக்கை
யிருந்தவனைச் சீயென்று நீத்த வன்றைப்
பாவமிஃ தென்றுமிகத் துயர் கூர்ந் தம்ம
பரிவினொடு தலைகுனிந்து பார்த்தோர் தாமே
மாவலிய வரியேறொன் றரசு வாவை
மலையுச்சி தனினின்று முருட்டி யாங்குச்
சாவநந்தக் குலமுழுதும் யானழித்த
தகையையின்று தலைநிமிர்ந்து காண்க மாதோ. (12)

இப்போது என்றன் சூட்பாரம் நீங்கிற்று. ஆயினும் விருஷலன் (விடலை) பொருட்டு இன்னுஞ் சஸ்திரங் கைக் கொள்கின் றேன். — (பாடுகின்றான்)

உலகத்தி னிதயமுறி யொன்பா னேய்க
ளொக்குநவ நந்தர்களு மொழிந்து போனா
ரிலகுபுனற் றடத்தினின்மா மலர்தா னூன்றி
யிருந்திடல்போற் றிருமகளு மௌரி யன்பா
னலமுடனே வீற்றிருக்கின் றனளஃ தல்லா
னட்பாளர் பகைஞரெனு மிருவர் கட்குந்
தலையன்பு பகையென்ற பலன்க டாமே
சமமாகப் பகுத்திடப்பட் டனவே யன்றோ? (13)

அவ்வாறே யான் நந்தர் குலத்தை வேரோடு களைந்தும் பய னென்னை? யான் இராட்சசனை யடக்காதிருக்குங்காறும், திருமக ளைச் சந்திரகுப்தனோடு சேர்த்திருந்தாலும் பயனில்லை. — (யோசிக் கின்றான்) ஓ! நந்தர் குலம் நாசமுற்றும், இராட்சசன் அவர்கண் மீது வைத்துள அன்பிற்கோ அளவில்லை! நந்த குலத்திற்குத் தூர பந்துவாக வேனும் ஒருவனிருக்கின்ற வரைக்கும் அவன் எனக்குப்

பகைஞனே. விருஷலனக்கு அமைச்சனுந் தன்மையை யடைதற்கு இன்னும் அவன் அருகனல்லன். எனது சூழ்ச்சியினால் இராட்சசன் சந்திரகுப்தனைத் தாக்குதலினின்றுந் தவிருமாறு முயற்சி செய்தல் வேண்டும். துணையற்ற நந்த வமிசச் சருவார்த்தசித்தி வானப் பிரஸ் தாசிரம முற்ற போதினுங் கொல்லப்பட்டனன். அங்ஙன மிருப்ப வும், இராட்சசன் மலயகேதுவோடு கூடி என்னைத் தாக்குவான் மிகவும் முயலுகின்றனன். — (வெள்ளிடையை நோக்கி) ஓ! இராட்சச! நல்லமைச்ச! சாதுவே! மக்களுட் பொன்னே! நன்று! நன்று!! ஆ! — (பாடுகின்றான்)

சேவகரிவ் வுலகதனிற் பொருள்வி ழைந்தே
செவ்வூர்தம்மாற் றெழில்புரிகின் றரனுர்தா
மாவலிற்போ கூழ்ப்பொழுது மவர்ச்சேர் கின்று
ரவர்மீட்டு மந்நிலையை யடைவா ரென்றே
மேவரிது நிற்போலத் தலைவன் றன்ன
வினைப் பொறையை யவன்செய் நல நினைந்து தங்கட்
சாவநன்மை நோக்காது பத்தியோடு
மவனிறந்த பினுந்தாங்கு வோரை யம்மா! (14)

இப்பொழுது யான் செய்ம் முயற்சியெல்லாம் உன்னைச் சந்திர குப்தன் பாற் சேர்த்திடல் கருதியே. இந்த விருஷலனுக்கு அமைச் சனுவகனு லெப்படி நன்மையுண்டாகும்? — (பாடுகின்றான்)

அறிவிலிவீர மிலியிவர் தம்மோ
டன்பு செய் வதிற்பய னென்னை
யறிவோடு வீர மிருந்தென பயனோ
வன்புறு பத்தியோன் றிலதே
லறிவோடு வீரம் புத்தியு மொருங்கே
யமைந்திடு சேவகர் தாமே
பிறிதரா மனைவி போலெப்போழ் தத்தும்
பிரியமுற் றிருப்பவ ரன்றே. (15)

ஆதலின் யானும் இவ்விஷயத்திலுறங்குகின்றிலேன். அவனை வசப்படுத்தும் வண்ணம் என்னாலியன்ற மட்டும் முயலா நின்றேன். அது நிற்க, விருஷலன், பர்வதகேசன் ஆகிய இவர் தம்முள் எவனே னும் ஒருவனது நாசத்தினாற் சாணக்கியனைச் சிக்கெனப் பிடிக்கலா மென்று எண்ணங்கொண்ட இராட்சசனே எங்களுக்கு மிக்கவுப காரியும் நண்பனுமாயிருந்த துணையற்ற பர்வதகேசனை விஷகன்னிகை (கடுமகள்) யினாற் கொன்றனனென்று அவன்மீது பழி பிறப்பித் தேன். அதுவும் அவ்வாறே யுலகிற் பரவாநின்றது. பர்வதகேசன் மகனாகிய மலயகேது "சாணக்கியனால் நின் தகப்பன் கொலையுண் டான்" என்று பாகுராயணன் சொல்லக் கேட்டு பயந்தோடி விட்ட னன். இவன் இராட்சசனோடு கூடி, அவன்றன் புத்தி சாதுரியத்

தினாலே யுதவிபெற்று நம்மை யெதிர்ப்பினும் எதிர்க்கலாம். அவனை மீட்டுங் கொல்லப்புகின் அஃதாவது இராட்சசனே பர்வதகேசனைக் கொன்றான் என்று பரவியுள பழியை மாற்றிவிடும். மேலும் நண்பர் பகைஞரென்று மிருதிறத்தாருள்ளும் உண்மையுள்ளாரையும் உண்மையுள்ளார்போல நடிப்பவரையும் ஆராய்வேண்டுமென்ற ஆசையுடையாரும், பல நாட்டினரும், பல வகைப் பாஷைகள் பேசுநரும், பல்வித நடையுடையாளரும், பல மாறு வேஷக்காரருமாகிய ஒற்றர் பல்லோர் என்னா லனுப்பப்பட்டுளர். **குசுமபுரக்** குடிகளுக்குள் நந்தனும், அவன மைச்சனுமாகிய இவர்பால் அந்தரங்க நேசமுள்ளோரைப் பொருளாராய்ச்சியின் மிகத்தேர்ந்த என்ற னொற்றர் ஆய்ந்து கொண்டிருக்கின்றனர். **பத்திரபடன்** முதலிய பிரதான புருஷர்களாகிய சந்திரகுப்தனது நன்மையையே நாடுவோர் தத்தஞ் செயல்களின் பயனை யென்னிடத் துரைத்துத் தத்தமது ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டனர். அரசன தின்பத்திலேயே கருத்தும், அரசன தருகினின்று நீங்காமையும், பரீட்சித்து உண்மை யென்றறிந்த பக்தியும், மிகுந்த சாக்கிரதையும் உள்ள என் மனிதர்கள் பகைஞன் அனுப்பும் விஷங்கலந்த பானங் கொடுப்பவரைத் தவிர்க்குமாறு நியமிக்கப்பட்டுளர்.— என்றன் சகபாடியும் நண்பனுமாகிய **விண்டுசன்மன்** என்பான் னொருவனுளன். அவன் உச்சை நூலினினும், தண்ட நீதியிலும் எண்ணெண் கலைகளுளொன்றென வியம்புஞ் சோதிடத்தினும் மிகத்தேர்ந்தவன்; இராட்சசனுக்கு மிகவும் ஆப்தனும், நந்தனது மற்றை மந்திரிகள் யாவருக்கும் நண்பனுமாவான். அவன் நந்த குலத்தையறுக்குமாறு யான் செய்த சூள் முடிந்த பின்னர்க் குசுமபுரத்திற்கு வந்து அமண் வேடம் பூண்டு உலவாநின்றான். அன்றியும் அவன் இப்பொழுது ஒரு பெருந்தொழில் செய்து முடிக்கப் போகிறான். அப்பொழுது பிறர் நகையாடற் பாலதாகும் ஈனமொன்றும் நம்பாலுளதாகாது.— மற்று, விருஷலனோ வெனில், இராச்சிய முழுதும் முதலமைச்சனாகிய வென்பால் ஒப்பித்து விட்டு கவற்சி யற்றிருக்கின்றனன். அன்றியும், ஓரரசனை அவன்றானே யிராச்சிய காரியங்களை யெல்லாம் பார்ப்பதனானுள வாந்துக்கங்களடைய வொட்டாமல், மந்திரிமார் அரசன் இராச்சிய பரிபாலனஞ் செய்தவன் கண் உதவி புரியின், அத்தகைய இராச்சிய நன்னிலையிலே லேசியிருக்கும்.— (பாடுகின்றான்)

உரிமைசா லடன்மிக வுளவராயினு
நகர விந்திரர் நலத்த நாடுக
ளருமதிப் பிறர்துணை யன்று கர்ப்பரேற்
பெரியவர் துயர்நிலைப் பேதுற் றாரரோ (16)

[சாணக்கியன் போகின்றான்.

முதற்களம் முற்றிற்று.

அங்கம்—I இரண்டாங்களம்

நிபுணக னென்னு மோரொற்றன் யம படத்தைக் கையிலேந்திக் கொண்டு வருகின்றான்.

ஒற்றன்:— (பாடுகின்றான்)

மற்றைய தேவர்தம் பத்த மாந்தரைச்
செற்றனு ருயிர்கொடு செல்லுகின்றதான்
மற்றைய தேவரை வணங்கு வானெவன்
பற்றியான் காலனைப் பணிகின் றேனரோ. (17)

துன்ப மெய்தினுந் தொல்சம னார்கழன்
மன்ப ணிந்தவர் வாழ்க்கைக லல்லவாங்
கொன்ப டைக்கலங் கொண்டுகொல் வானவன்
றன்ப தத்துணை தம்மை வழுத்துவேன். (18)

ஆகையால் யானிவ் வீட்டிற்குட் புகுந்து யம படத்தைக் காட்டிப் பாடுகின்றேன்.

[சாணக்கியனது வீட்டினுட் செல்லுகின்றான்]

மாணவன்:— (அவனை நோக்கி) நண்ப! உட் செல்லாதே

ஒற்றன்:— ஏ! பார்ப்பான்! யார் வீடிது?

மாணவன்:— மிகச் சிறந்த பெயர்வாய்ந்த என்றன் ஆசிரியர் வீடிது.

ஒற்றன்:— (சிரித்துக்கொண்டு) இஃதென்றன் அறத்துணைவன் வீடா மாதலி னென்னைப் புக விடுவாயோ? உன்றனுவாத்தியா னுக்குத் தன்மோபதேசஞ் செய்கின்றேன்.

மாணவன்:— (வெகுண்டு) சீ! அறிவிலி! என்றனாசிரியனினும் நீ யறநூலினற வல்லை கொலோ?

ஒற்றன்:— ஏ! பார்ப்பான்! கோபித்துக்கொள்ளாதே! யாவரும் யாவற்றினும் வல்லவராகார். ஆகவே உன் உவாத்தியானுக் கேதோ கொஞ்சந் தெரியும். அது போலவே என்போலியருங் கொஞ்சந்தா னறிவார்கள்.

மாணவன்:— (மிக வெகுண்டு) ஏடா! மூர்க்கா! முற்று முணர்ந்த வென்னாசிரியரிடத்தி னின்றுங் (கல்வியைக்) கவர்ந்து கொள்ளவோ விரும்புகின்றனை?

ஒற்றன்:— ஏ! பார்ப்பான்! உன்றனுவாத்தியானுக் கெல்லாந் தெரியுமென்கிறாயே! சந்திரனை வெறுப்பவன் யாவனென்று தெரியுமா?

மாணவன்:— *ஏடா! மூர்க்கா! இதனையறிவதனு லென்றன் குறவர்க்கு யாது பயன்?*

ஒற்றன்:— *ஏ! பார்ப்பான்! உன்றனுவாத்தியான் அறிய வேண்டுவதனையறியான். கமலன் சந்திரனை வெறுக்கின்றதென் பதை மாத்திர முணர்வாய். இதோ பார்:— (பாடுகின்றான்)*

செவிய் பங்கயஞ் சீரிதே
சவிய சந்திரன் றன்வர
வலிய வுட்களிப் பன்றிறே
குவியு மாறுளங் கோடியால்.   (19)

(சாணக்கியன் கரந்து வருகின்றான்)

சாணக்கியன்:— *(கேட்டுத் தனக்குள்) நன்று! சந்திரகுத்த னுக்கு விரோதிகளை யிவன் மூலமா யறிவேன்.*

மாணவன்:— *ஏ! மூர்க்கா! என்னை யொன்று கிடக்க வொன்று பேசுகின்றனை?*

ஒற்றன்:— *ஏ! பார்ப்பான்! இது சமயத்துக் கேற்றதுதான் ஆனல்—*

மாணவன்:— *என்ன?*

ஒற்றன்:— *என் பேச்சைக் கேட்பவர் அதனைத் தாமே யறிந்து கொள்ள வேண்டும்.*

சாணக்கியன்:— *(வெளியாய்) நண்பா! தடையின்றி யுள்ளே வருதி! உன் பேச்சைக் கேட்டறிபவனைப் பெறுவாய்.*

ஒற்றன்:— *நான் உள்ளே போகின்றேன் (உள்ளே போயணுகி) வெல்க, வெல்க!! ஆரியா!*

சாணக்கியன்:— *(தனக்குள்) நிபுணகன் இன்ன காரியத்தின் பொருட்டு அனுப்பப் பட்டன னென்று யானறிகிலேன்— (மௌனம்) ஓ! உணர்ந்தேன்! உணர்ந்தேன்!! சனங்களது கருத்தையும், நோக்கத்தையும் அறியுமாறு அனுப்பப்பட்டான் நிபுணகன்! (வெளியாய்) நண்பா! மிகவும் நன்று! இப்படி யிருப்பாய்.*

ஒற்றன்:— *எசமான்க ளுத்தரவுப் படி.*

(தரை மீ திருக்கின்றான்)

சாணக்கியன்:— *நண்பா! உன்னை யனுப்பிய தெதன் பொருட்டோ அதனைக் கூறுக. பிரசைகள் விடலற்கு விரோதி களா?*

ஒற்றன்:— *நன்று. நமதையன் சந்திரகுப்தனுற் றமது சோக நீங்கிய சனங்கள் அவன் மாட்டுறுதிபு மன்பு முடையா ராயினர்,*

ஆயினும் அமைச்சனும் இராட்சசனை யடுத்தார் மூவர் இந்நகரின் கணுளர். அவர் நந்தஞ் சந்திரகுப்தன் அரசாளல் பொறார்.

சாணக்கியன்:— (வெகுண்டு) தாம் வாழல் சகியாரென்று சொல்லுதி—நண்ப!—அவர்கள் யாவர்?

ஒற்றன்:— அவர் தம் பெயர்களின்ன வென் றுணர்கிலாது தங்கள் பாலிதனை யான் சொல்லவும் வருவலோ?

சாணக்கியன்:— அவர் தம் பெயர்களை யறிய விரும்புகின்றேன்.

ஒற்றன்:— ஐய! இதனைக் கேள். முதலாவன் ஒரு சமணன்; நடுவு நிலைமை குன்றாது அவர்களைச் சேர்ந்துளான்.

சாணக்கியன்:— (தனக்குள்) நந்தம் பகைஞன்பா லன்புடைய சமணன்! (வெளியாய்) அன்னான் பெயரென்னை சொல்?

ஒற்றன்:— அவன் பெயர் 'சீவ சித்தி'.

சாணக்கியன்:— அன்னான் நந்தம் பகைஞர் பாலனென் றெங்ஙன முணர்ந்தனை?

ஒற்றன்:— அமைச்சன் ராட்சசனா லனுப்பப்பட்ட விஷ கன்னிகையைக் (கடுமகளைக்) கொண்டு பர்வதேசுர ராசனை யவன் கொன்றமையா லுணர்ந்தேன்.

சாணக்கியன்:— (தனக்குள்) சீவசித்தி யென்ற னொற்றனன்றே! (வெளியாய்) நண்ப! இரண்டாவன் யாவன்?

ஒற்றன்:— மற்று, அவன் அமைச்சன் ராட்சசனுக்கும் மிகப் பிரிய முள்ளவனும், காயஸ்தனுமாய 'சகடதாஸன்' என்போன்.

சாணக்கியன்:— (தனக்குள் நகைத்து) காயஸ்தன்!—ஓரிலகு மாத்திரை. பகைவனாயினும் அவ்வாறு சொல்வது தக்க தன்று. அவன் பால் நமது நண்பன் சித்தராத்தகனை நியமித்திருக்கின்றேன். (வெளியாய்) நண்ப! மூன்றாவனின்னனென் றறிய விரும்புகின்றேன்.

ஒற்றன்;— (நகைத்து) மூன்றாவனோ வெனின் அவன் அமைச்ச ராட்சசனுக் கிரண்டாவ திதய மாவான், புட்புரத் துறைவோன், வணிகர் தந்தலைவன்; சந்தனதாஸப் பெயரினன். இராட்சசன் நகரை விட்டோடும் போது அவன் வீட்டின் கண்ணேயே தன் மனைவி முதலாயினாரை விட்டுவிட்டுப் போயினான்.

சாணக்கியன்;— (தனக்குள்) இவனிராட்சசனுக்கு ஆன்மநேய னல்லனேல் அவனிவன்பாற் றன்மனைவியை விடுத்துப் போகான். (வெளியாய்) சந்தனதாஸன் வீட்டிலே யிராட்சசன் றன் மனைவியை விட்டுப் போயினனென்று எப்படி யறிந்தனை?

ஒற்றன்;— *ஐயா! இம் முத்திரை மோதிரத்தினாலேயே யானறிந்தேன். (மோதிரத்தைக் கொடுக்கின்றான்)*

சாணக்கியன்;— *(முத்திரை மோதிரத்தை வாங்கிப் பார்த்து வாசிக்கின்றான்.) இராட்சசன்.— (தனக்குள் நகைத்து) இனி யிம் மோதிரத்தினாலே யிராட்சசனைப் பிடித்துக் கொண்டேன். (வெளியாய்) நண்ப! நீ யெவ்வாறிதனை யடைந்தனை? அதனைச் சாங்கோபாங்கமாய்க் கேட்க விரும்புகின்றேன்.*

ஃ ஃ ஃ

(இதற்குமேல் கையெழுத்துப் பிரதியோ அச்சுப் பிரதியோ கிடைக்கவில்லை)

ஃ ஃ ஃ

இந்நூலாசிரியரியற்றிய 'மதிவாணன்' என்ற புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதையில் வெளியிடப்படாத ஒரு **விநாயகர் வணக்கம்** *குறித்த வெண்பாவொன்று 20—8—1897-ம் வருஷம் இயற்றப்பட்டு ஞானபோதினி என்ற சஞ்சிகையில் முதல் சம்புடத்தில் முதல் இதழில் அட்டையில் 3-ம் பக்கத்தில் வெளிவந்திருக்கிறது. அதைக் கீழே காண்க.*

ஃ ஃ ஃ

மதிவாணன் கதை

விநாயகர் வணக்கம்

நேரிசை வெண்பா.

தன்மமெழில் வீரமன்பு தாமொருருப் பெற்றவெனு
நன்மதிவா ணத்தலைவ ைமத்தாற்—சொன்மதிக்குஞ்
செந்தமிழின் வாசகத்தோர் செய்யகதை சொல்லவருட்
டந்துதவும் வாரணத்தின் றாள்.

20—8—'97

‘ வர்ணவைத்திய சாஸ்திரம் ’

என்ற நூலைப்பற்றி,

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்

தமிழ்த் தலைமைப் பண்டிதர்

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், B. A.

சொல்லிய

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமகள் பொலியுந் திருவையா றதன்கட்
புனிதமா ரனந்தைய வீன்ற
பாமரு சாமி நாதவேட் சுகுணன்
பன்மொழி பயின்றநற் பனவன்
மாமகிழ் வெய்தி மதிகொடு வண்ண
வைத்திய நூலினை வகுத்தான்
பாமரர் கலைஞர் யாவரும் படித்துப்
பயன்பெற்றுச் சுகமுற மாதோ.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய முடுகு விருத்தம்.

என்னை மனங்கனி மேவுபு கேண்மினெ னின்றமிழ் நாட்டினர்காள்
மன்னுறு வண்டமிழ் மாமொழி யிற்பல வாகட நூல்களுளே
நன்ன ரியற்றிய வண்ண வயித்திய நாம முறுந்தனி நூ
லின்ன லொழித்திடு மின்ப மளித்திடு மேரும் விளைத்திடுமே.

20—1—’98.

ஃ ஃ ஃ

வைகுண்ட ஏகாதசி தினத்தில் திருவல்லிக்கேணி **ஸ்ரீ பார்த்த சாரதிப் பெருமானைத்** தரிசிக்கப்போன சந்தர்ப்பத்தில் இப்பாடல் வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியால் இயற்றப்பட்டது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய முடுகு விருத்தம்.

சேர்த்த செங்கம லத்தி னிற்றிகழ் தேவி கட்கடை நோக்கமுங்
கூர்த்த புந்தியு நோயி லாமை குலாவு தேகமு மேவுமே
நார்த்த லைப்படு நாத னெம்பர நார ணப்பெரு மானெனும்
பார்த்த சாரதி பாத தாமரை பண்பி னிற்றொழு வேயரோ.

20—1—’98.

இந்நூலாசிரியரியற்றிய தமிழ் வியாசங்கள் என்ற நூலில் ஏழாம் பகுதியான 'சொற்பொருளாராய்ச்சி' என்ற வியாசம் ஞானபோதினிப் பத்திரிகையில் வெளிவந்தது. அவ்வியாசத்தைப்பற்றிய ஒருவரது அபிப்பிராயம் கடிதமூலமாக ஞானபோதனிப் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது அதைக் கீழே காண்க:

கடிதம்.

தமிழுலகர்க்காத் தந்த விண்ணப்பம்.

பிரமஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரிகளாகிய பரிதிமாற்கலைஞரவர் கட்குத் தமிழுலகோர் பொருட்டுத் தந்த விண்ணப்பம்:

சென்ற ஞானபோதினிச் சஞ்சிகைகளுளொன்றில் தாங்கள் அறு என்ற தாதுவைக் கொண்டாய்ந்த பகுபத முடிவுகளைக் கண்டு ஆநந்தங் கொள்ளார் சிலரேயாவர். அறம், குதிரை, நிலம் முதலியன பகாப்பதங்களா மெனச் சிவஞான முனிவரரே கூறினுமென்னை? நங்கோவையப் பெரிய சந்திரசேகரம் பிள்ளை யவர்களிடம் அவர்கள் முடித்து வைத்திருக்கும் காரணப் பதமுடிவுகளை நோக்கிக் காலஞ் சென்ற மகாவித்துவான் தாமோதரம்பிள்ளை யவர்கள் சித்தாந்தத்தி னேயே தங்கருத்துங் காலமுமெலா மூன்றிச்செலுத்திய அம்மா பாடிய முடையார்கூற்று இவ்விடயத்திற் கூற்றேயா மென்றனர். மகா நாவலர்களுளரேனும் அவர் தஞ்செய்கைகண்டு மறுபடிற் றுமஞ்சலேனோ?

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோக்கநகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேற்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பார்க ளோதமிழ்ப் பாடிய பாவலரே"

என்ற தூக்குத் தூக்கற்பாலதே. தாதுக்களைக் கொண்டு பத முடிபு கண்டு "முடித்தற்கரிய வென்பாரு முளர்; முடிப்பான் பக்கம் வலியுடைத்து" எனவுரையாசிரியர் பெருந்தேவனார் கூறியுள்ளா ரன்றே? இதனாற் குசை நுனிமதிகொடு பிரிக்கவகையறியாரே, அங்ஙனம் அரியவெனக் கூறுமவரென்ப தங்கை நெல்லியங்கனியிற் போதரும். இது நிற்க, ஐரவபாடையினுந் தேர்ந்து பட்டம்பெற்று வடமொழிப் பயிற்சியுங் கொண்டுற்ற தாம், ஆங்கிலத்தாரியற்றி யெழுதாவெழுத் தேற்றிய நன்முறைக் கொளப்பவே தாதுபதார்த்த விளக்க வகராதி யொன்றியற்றி வெளிப்படுத்தல் சாலநலமும் நீடூழி

பெயர் நின்று நிலவுதற் கேதுவுமாம். அங்ஙனஞ் செய்தல், பட்டாசாரியர் மோக்கமூலர் முதலியோ ரியற்றியனவும், இலிங்க பட்டீயமும், சிலப்பதிகாராதிகளிற் பகுதிப் பொருளுரையொடு காட்டப்பட்டனவும் வீரசோழியத் தங்ஙனே தெரிக்கப்பட்டனவும், தொல்காப்பியத்துற்றனவும்,

"விளக்கப் படுதலான் விளக்கெனப் படுமே"
"ஆழ முடையதா ழாழி யெனப்படும்"
"அவாவற வளித்தலா னறமெனப் படுமே"
"ஏயன் விகுதி யெய்தும் பிள்ளைக்கே"

எனலாதியவாய் பேரகத்தியமென வழங்குமதுவும், அறுவகையிலக்கணம் ஏழாமிலக்கணம் என்னுமவையும், மேலும் பலவற்றொடு நாளதுகாறுஞ் சென்னையாதிய தலங்களினின்றும் பல்வகைப் பரீக்ஷைகட்குப் பற்பல பண்டிதர்கள் வெளியிட்ட வுரைக்கணமும், ஆறுமுக நாவலரவர்கள் சௌந்தரநாயகம் பிள்ளை யவர்களாதியோர் அச்சிட்ட விலக்கணங்களிற் காணும் பகுபத முடிபுகளும், வேறும் பல்வேறு வ்கையினுற்ற வகையுங் கண்டோர்ந்தாய்ந்த தமக்கு மிகச் சுலபமாம். கீழேகாட்டிய எம்மூர்ப் பெரிய சந்திரசேகரம் பிள்ளை யவர்கண் முடித்து வைத்திருக்கும் பகுபத விளக்கமாஞ் சொற்பொருளாராய்ச்சியும் கண்ட தாமோதரம்பிள்ளையவர்கள் ஐயரொருவரோடு சேர்ந்து முடித்து வைத்திருப்பதாயும் எமக்கெழுதிய கவிக்கடிதங்கள் சிலவற்றுளொன்றின் அச்சிடுவதாக விருப்பின் எமக்கனுப்புவதாக வாக்களித்திருந்த அச்சொற் பொருளாராய்ச்சி முடிவும், யாழ்ப்பாணத்துப் பண்டிதரொருவர் தாதுப்பொருட் காரணங் காட்டி அச்சேற்றியிருக்கும் சூடாமணி நிகண்டும் பெற்றுக்கோடல் நெடுநாட் சிரமத்திடைப்படுத்தாது விரைவின் வெளிப்படுத்தற்காமுதவியாமன்றே? இங்ஙனம் தமது ஞாபகக் களஞ்சியத்துற்றவும் யோசிக்க வுடன் வெளியாமவையுஞ் சேர்த்தாமல்லோ மெனல் குறையன்றே. வேண்டுற்ற இத்தகையதோ ரகராதி சௌகரியமுற்ற தம்போலியரா னன்றே வெளிவந்து நிலவவேண்டுவது? இம்முயற்சியிற் பிரவேசித்து ஊக்கமுடன் சம்பூர்ணமாக்கிப் புத்தக ரூபமாய் வெளிப்படுத்தற்குத் தக்க பல வநுகூலங்களையும் எம்பெருமான் கிருபை பாலிக்குக தமக்கெனு வன்னேன்றிருவருளை யிரந்து பிரார்த்திக்கின்றேம்.

சி. வீரா. சாமிநாத பிள்ளை.

ரூபாவதி

செய்யுண் முதற்குறிப் பகராதி

[உடுக்குறியுற்றன மேற் கோட்பாக்களாம்]

முதற்குறிப்பு	பக்கம்	முதற்குறிப்பு	பக்கம்	முதற்குறிப்பு	பக்கம்
அங்கயற்க	68	கலையெலாங்	23	பட்சமுடன்	68
அஞ்சுகமே		கற்றுணர்ந்த	107	பண்களி கூர்ந்	36
அதுலந்த்	68	* கனவினுமின்	88	பன்னருஞ்சற்	88
அருவுருவ	107	கன்னிகைரூ	76	புகழ்ந்துநீர்	16
அன்புகுடி	76	கன்னிரூபா	13	புண்கொண்ட	49
அன்னையெனுஞ்	17	காஞ்சிடை	67	பூஞ்சோலைக்	67
ஆசாற்பணி	102	* குற்றமேதெரி	68	பூமகளே	50
ஆசான்றனை	202	கூகைபே	68	பெருமான்விந்	33
* ஆடகமது	113	* கொடுங்கோன்ம	56	பொற்புறழு	17
ஆம் அல்வ	39	கோட்டையினைச்	76	பொன்னனைய	78
ஆவலொடென்	68	சதாசிவா	103	போதன்வந்	34
ஆனேறினி	40	சந்தனநறு	111	* போற்றினும்	108
இராப்பாடிப்	68	சம்போசாம்	40	மங்கைபாக	79
இராமனுளி	31	சரிதான் தந்	89	மத்தகோகிலச்	19
இறைவன் வந்	38	சுத்த வீரர்	31	மந்தநகை	57
இன்பமேயி	66	சுந்தரபாலை	67	மழகளிறு	38
இன்பவனப்	47	சுந்தராநந்தனே	68	மணங்கொண்டு	107
இன்னமிழ்துங்	120	சுந்தராநந்தவள்	120	மாரன் மலர்க்	45
உமையவடன்	76	செம்மையுள்ள	40	மார்பினுநா	103
உருக்கியிட்ட	76	சொல்வளர்	2	மாறுகச்	68
உலகமென்னு	13	சோலைதன்னிற்	47	* மின்னிகரா	33
உலவுசெலு	13	தந்திர தீரன்	89	* முற்பகற்செய்	56
உளமென்னு	118	தந்தையேநின்	17	மூவாமுன்ன	40
உள்ளந்திரித்	87	தந்தையையுந்	17	மேகமேநீ	67
எத்தனையோ	75	தனுமேல்விற	102	மேற்கொண்ட	83
என்றனது	46	தலைவன்வந்	38	வள்ளலும்வந்	38
என்னருமை	68	தாயாகு	76	வனப்புடையா	47
என்னினிய	76	திங்களொனு	74	வாரல் சகோ	50
என்னுடன்பி	15	* தீர்ந்தவன்	101	வாழ்க ! வாழ்க !	88
என்னுடைய	68	தென்றலே	68	* வானுகி	118
என்னேநின்	27	* தொண்டவுழ	112	வானோங்கும்	103
என்னையாளு	119	தோகைமா	34	விண்ணிளத்துச்	68
ஐயோமறந்	75	நலவிமல	103	வெளியுறவுல	97
* ஒருவனே	101	நறைமுடிக்கார்க்	103	வேலையின்றிப்	52
ஒழுகுறுகி	47	* நன்றிமறப்	43	வையமேத்து	40
ஒற்றுமையின்	78	நன்றேநும	78	வையையே	69
கரிசுடைப	73	நிம்பமலர்	43		
கரும்பிழிசா	63	* நுண்ணறிவு	65		

ரூபாவதி

இராகப் பாட்டுக்களின் அகராதி

முதற்குறிப்பு	இராகம்	தாளம்	பக்கம்
அரனருள்நாடி	மோகனம்	ஆதி	85
உன்னையேஞயமி	செஞ்சுருட்டி	ஆதி	49
கோமளமாதேயா	நாதநாமக்கிரியை	ஆதி	63
நாயகனே வருவாய்	இந்துஸ்தான் காபி	ஆதி	21
வாமனே சுந்தரேச	பூரிகல்யாணி	சாப்பு	67

தனிப்பாசுரத் தொகை

பாசுர முதற்குறிப் பகராதி

முதற்குறிப்பு			பக்கம்
அருட்பயிர் தழைக்கு மணிபெறு நன்னிலம்	...	...	154
அழகி னியலினை யநுபவித் தறியார்	...	...	160
அறந்தரு மிறைவ னருட்படைப் பெவற்றுளுஞ்	...	...	158
அறிவே! மக்கட மாருயிர்க் குறுதியே!	...	...	138
அன்பே! அன்பே! அழகுசா லன்பே!	...	...	140
ஆடலு மழகும் பாடலுஞ் சான்ற	...	...	
இம்மையின் பத்தி னினிய முதலாய்ச்	...	...	142
இயற்கை யொழுங்கி னினிது காண்புறாஉம்	...	...	156
இன்ப வூற்றே! துன்பப் பகையே!	...	...	162
உலகமா மங்கைதன் றலைவனும் பரிதிகண்	...	...	186
எங்கணும் விளங்குறு மிறைவனே! எண்குணக்	...	...	136
என்னே! எறும்பீர்; எழிற்சிற் றெறும்பீர்!	...	...	
ஓரிலாட் கோண்முறை யுற்ற தலைவனால்	...	...	162
கல்வியே! மக்கடங் கண்ணே! புலவர்தஞ்	...	...	146
கற்பென் பதுகலை.கல்லாமை யன்று; மற்	...	...	166
காமமே கடுதீக் காமமே! காந்துமின்	...	...	
குருவனை; ஞானத் திருவனை! மாந்தர்	...	...	150
கொண்ட தலைவனுக் கெண்டரும் பெற்றி	...	...	164
செயிரி லிசையெனுஞ் சீரிய வின்பமே!	...	...	142
ஞாயிறு மறைந்தது; நண்ணுபே ரமைதிய	...	...	188
தந்தைக் குதவுந் தனிமகன் போல	...	...	152
தாழ்குலத் துதித்தவன் வாழ்குரு வாகிய	...	...	
துயிலே! மனிதரின் றுணையே! இமையினில்	...	...	188
நிலனே! எவற்றையு நேர்ந்து தாங்குவோய்!	...	...	170
பரிதியே! நாடொறும் பண்பி னிளங்கதிர்	...	...	174
புள்ளே; மென்சிறைப் புள்ளே! பலவகை	...	...	
பொழிலே! நறியபைம் பொழிலே! தாமரை	...	...	190
மதியே! தண்கதிர் மதிமகிழ் வுறப்போய்;	...	...	176
மயக்க விருளே! மயக்க விருளே!	...	...	
மலரே! மலரே! என் மனம் மலர	...	...	192
மலையே! பல்லுயிர் வாழ்முர ணிலமே!	...	...	180
மன்பே ருலக மாண்பொறைத் தலைவன்முன்	...	...	168
முந்தை நாட்களின் முதறிவிலார்கற்	...	...	
முகிலே! மைந்நிற முகிலே! கடன்மகள்	...	...	184
யாறே! தீம்புனல் யாறே! ஓவா	...	...	182
வளியே! பரந்த வெளியி னுலவுறாஉம்	...	...	182
வாய்மையே! சிறப்பொடு மாட்சிசேர் குணனே!	...	...	138
வாய்வா ளாமை மேயநூற் குரவிர்காள்!	...	...	148
வாழிய கடலே! வாழிய கடலே!	...	...	172
வாழிய மனனே! மக்கடம் மாட்சியே	...	...	154
விண்மீ னினங்கள்! மிடைந்தொளிர் படையே!	...	...	178
விழுப்பஞ் சான்ற வியத்தகு மில்லறம்	...	...	168
வெகுளித் தீயே! வெகுளித் தீயே!	...	...	

INDEX TO FIRST LINES

First Lines		Page
Before his master,—long-enduring earth,—	...	... 199
Bright Bird, on pinion soft upborne ! I knew	...	...
First fruit of all the pleasure nature yields	...	... 143
Fountain of gladness, foe of grief's annoy	...	... 163
Gloom of bewilder'd mind ! The vision clear	...	...
Hail, Reason's gift, glory of human-kind !	...	... 153
Hail to thee, Ocean, hail ! unfailing source	...	... 173
In dancing and singing and beauty ye shine	...	...
In days of yore, men not very wise	...	...
Learning ! Thou eye of men ! The sages find	...	... 147
Like only Son, the father's help and joy,	...	... 153
My God ! filled with Thy glorious Majesty	...	... 137
My silent teachers ye !—nor sound, nor speech,—	...	... 149
O Ant, so small and shapely,	...	...
O Cloud ! O dark-hued Cloud ! vast ocean's child !	...	... 185
O Earth : for aye thou dost endure ;	...	... 171
Of all the aids to virtue God has given	...	... 159
O Flower, fair Flower, whose tender leaves expand !	...	...
O Harmony ! Thou name of pure delight !	...	... 145
O Leafy Glade, with fragrant verdure spread ! the lake,	...	... 191
O Love divine ! thou ever beauteous Love	...	... 141
O Lust, thou scorching flame, whose smoky cloud	...	...
O Silver lily on the heaven's blue lake,	...	... 177
O Sleep ! Thou solace sweet of human-kind !	...	... 189
O Sun ! o'er every land, thro' all the days,	...	... 175
O Truth, with beauty and high glory crown'd	...	... 141
O Wind ! careering now thro' open sky ;	...	... 183
O Wondrous virtue of pure Household Life !	...	... 167
O Wrath, fierce Wrath ! thou devastating flame,	...	...
River ! Whose waters sweet through meadows glide,	...	... 183
Sage Valluvar, priest of the lowly clan,	...	...
Teacher of truths divine, who dost restrain	...	... 151
The goodly Gleebe where fruits of grace are grown ;	...	... 155
The sun is gone. The moon her tranquil light	...	... 189
They rave of Beauty who taste not its grace	...	... 161
To wedded lord observance due she pays ;	...	... 165
True Husband home with one choice bride must share,—	...	... 163
What vision this ! Is it the Dawn's soft hour ?	...	... 187
When all that live and labour here we scan.	...	... 157
Wisdom ! sole strength of life to man below !	...	... 139
Ye Stars of heaven ! a cluster'd army bright,	...	... 179
Ye tow'ring Mountain Heights, the rugged home	...	... 181
You ask what Wifely Excellence may be	...	... 167

மதிவாணன்

செய்யுண் முதற்குறிப் பகராதி

[* உடுக்குறியுற்றன மேற்கோட் பாக்களாம்]

முதற்குறிப்பு	பக்கம்
அரசனுங்	255
*அருளுமன்பு	266
அறிவொடுங்கி	240
அன்புக்குரி	261
அன்போடரு	213
ஆகையின்மா	231
ஆடன்மறந்	231
*இன்பச் செவ்வி	267
இன்பவல்லி	268
எப்போது	230
தானந்த / இன்பவடி	230
என்றனரே	239
என்றென்றலை	231
ஒத்தநல	246
*ஓர்ந்துகண்	266
*கடிதோச்சி	266
கண்டவக்	242
கண்டனன்	241
கண்ணில்யாக்	256
கர்விற்புகுந்	239
*கொலையிற்கொடி	266
கொள்விடத்தே	238
*சினமென்னுஞ்	248
செவ்விபெறு	266
தன்னியதய	243
தூவிரிதா	237
*தேன்பாலுகந்	232
தேனீனு	210
*நட்டான்	223
நாளத்தா	260
நீதியாக	265
பெண்களி	238
பெண்ணே !	240
மந்தரமலை	237
யாணர்மே	240
விம்மினர்	238

நாடகவியல்

நூற்பொருளகராதி

குறியீடு

[ப: பக்கம்; சூ: சூத்திரம்; வ: வரி.]

அங்கம் ப. 371, 372. (நாடகச் சாதி) இலக்கணம் சூ. 131. சிறப்பங்கம். சூ. 132

அங்கம். ப. 403. (நாடக வுறுப்பு) இலக்கணம். சூ. 187, 189, (190)

அச்சம். ப. 321. இலக்கணம் சூ. 53

அச்சவவிநயம். ப. 439. இலக்கணம் சூ. 251

அரக்கி. ப. 357. இலக்கணம் சூ. 106

அரங்கு. ப. 456. இலக்கணம் சூ. 266

அரசர். ப. 298. (நாடகவகுப்பு) வகுப்பு. சூ. 29

அல்லீசம். ப. 387. இலக்கணம் சூ. 156

அவலந்தவிநயம். ப. 439. இலக்கணம் சூ. 250

அவலர். ப. 319, இலக்கணம் சூ. 51. பிரிந்துறை யின்பத்தின் வேறுதல் சூ. 52

அவிநயம். ப. 431. இலக்கணம் சூ. 255. பொது சூ. 241. வகை சூ. 236, 242, 252.

அவிநயவிரி. ப. 440. வகை சூ. 253. தோற்றம் சூ. 254. விலக்கு சூ. 255. தெரிகுநர் சூ. 256

அறம் ப. 295. இலக்கணம் சூ. 22.
ஆகாரியம். ப. 433. இலக்கணம் சூ. 239
ஆங்கிகம். ப. 432. இலக்கணம் சூ. 237
ஆரபடி. ப. 393. இலக்கணம் சூ. 170
இசைப்பாட்டு. ப. 333. இலக்கணம் சூ. 71. வகை சூ. 72, 75, 76.
இடப்பொருத்தம். ப. 328. இலக்கணம் சூ. 62
இடிமம். ப. 370. இலக்கணம் சூ. 123
இரதி. ப. 326. அன்பின் பெயர் சூ. 58. வ - 1. பத்தி. வ - 3. வாற்சலியம் வ - 4. இரக்கம். வ - 5.
இராசகம். ப. 382. இலக்கணம் சூ. 148
இலாசியம். ப. 451. கோலத்தின் வேறு பெயர் சூ. 262
இழிப்பவிநயம். ப. 438. இலக்கணம் சூ. 249
இழிப்பு. ப. 318. இலக்கணம் சூ. 50
இன்பம். ப. 296. இலக்கணம் சூ. 24, 25
ஈகாமிருகம். ப. 371. இலக்கணம் சூ. 130
உல்லாடகம். ப. 389. இலக்கணம் சூ. 160
உபசாதி. ப. 375. வகை சூ. 136, 137
உபநாயகன். ப. 349. இலக்கணம் சூ. 92. வ - 1. இலக்கியம் இலக்குவன் வ - 2
உல்லாப்பியம். ப. 380. இலக்கணம் சூ. 144. பிறர் கோள் சூ. 145
உவகை. ப. 306. இலக்கணம் சூ. 40. வகை சூ. 41. உடனுறை பிரிந்துறை வ - 1. நால்வகைப் பிரிந்துறை சூ. 42
உவகையவிநயம். ப. 434. இலக்கணம் சூ. 243
உள்வரி. ப. 414. இலக்கணம் சூ. 209
உறுப்பியல்பு. ப. 395 - 423. இலக்கணம் சூ. 174. வ 1 - 3. பொதி பொருள் சூ. 174. வ. 3 - 6
உறுப்பியல்பு புறனடை. ப. 423. சூ. 223
எடுத்துக்கோள்வரி. ப. 417. இலக்கணம் சூ. 214
எழினி. ப. 460. இலக்கணம் சூ. 267
ஒழிபு. ப. 389. சூ. 159 - 173.
ஒழிபு. ப. 422. சூ. 221 - 223.
ஒற்றுமை. ப. 430. இலக்கணம் சூ. 233
கண்கூடுவரி. ப. 413. இலக்கணம் சூ. 207
கதார்த்தம். ப. 359. இலக்கணம் சூ. 12. வ - 1 - 2. வகை சூ. 12. வ - 3 - 4
கந்தை. ப. 292. இலக்கணம் சூ. 12. வ - 1 - 2. வகை சூ. 12. வ 3 - 4
கதை நிறை கரம். ப. 403. இலக்கணம். சூ 188
கருப்பம். ப. 302. இலக்கணம் சூ. 35
கவிகூற்று. ப. 345. இலக்கணம் சூ. 79
கரம். ப. 404. இலக்கணம் 191, 192. விலக்கு சூ. 193
காட்சிவரி. ப. 416. இலக்கணம் சூ. 213
காணுநரிருக்கை. ப. 461. பொதுவிலக்கணம் சூ. 268. சிறப்பிலக்கணம் சூ. 269 - 270
கான்வரி. ப. 413. இலக்கணம் சூ. 208
கானல்வரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 7 - 9
காமினி. ப. 357. இலக்கணம் சூ. 101
காலப்பொருத்தம். ப. 328. இலக்கணம் சூ. 63
காவியம். ப. 380. இலக்கணம் சூ. 146
கிளரிவரி. ப. 415. இலக்கணம் சூ. 211
கீர்த்தனம். ப. 336. இலக்கணம் சூ. 73. வகை சூ. 74
கிழமைக்கன்பா. ப. 332. சூ. 70
குரவைக்கூத்து. ப. 409. இலக்கணம் சூ. 202
குறிப்பு. ப. 401. இலக்கணம் சூ. 184 - 186
கூத்து. ப. 408. இலக்கணம் சூ. 200. வ. 1. வகை. வ. 2-3
கூத்துநூல். ப. 391. இலக்கணம் சூ. 165. வகை. சூ. 166
கூற்று. ப. 405. வகை. சூ. 195, 199
கைசிகி. ப. 393. இலக்கணம் சூ. 171
கோட்டி. ப. 377. இலக்கணம் சூ. 140
கோலம். ப. 450. வகை சூ. 261. வேறு பெயர் இலாசியம் சூ. 262
சட்டகம். ப. 377. இலக்கணம் சூ. 141
சந்தி. ப. 299. இலக்கணம் சூ. 32. வ. 1-3. வகை. வ. 4-5
சமநிலையவிநயம். ப. 436. இலக்கணம் சூ. 246
சமம். ப. 315. இலக்கணம் சூ. 46. பொதிபொருள். சூ. 47
சமவகாரம். ப. 369. இலக்கணம் சூ. 128
சமுலாபகம். ப. 383. இலக்கணம் சூ. 149
சாதி. ப. 365. வேறுபெயர். உருவகம் சூ. 119-121. வகை. சூ. 122-125
சாதிப்புறனடை. ப. 388. இலக்கணம் சூ. 158

சாத்துவதி ப. 392. இலக்கணம் சூ. 169
சாத்துவிகம். ப. 433. இலக்கணம் சூ. 240
சாந்தை. ப. 356. இலக்கணம் சூ. 105
சாயல்வரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 21-25
சார்த்துவரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 4-6
சிறப்பியல்பு. ப. 365-395. பொதுபொருள் சூ. 118
சிறப்பியல்பு புறனடை.ப. 395 சூ. 173
சிற்பகம். ப. 385. இலக்கணம் சூ. 152
சுதணை. ப. 356. இலக்கணம் சூ. 104
சுவை. ப. 304. இலக்கணம் சூ. 38. வகை. சூ. 39. ப. 309.
சுவைத்துணை. ப. 325 இலக்கணம் சூ. 55
சுவைநிலைக்களன். ப. 431. இலக்கணம் சூ. 234
சுவைப் பாகுபாடு. ப. 326. மென்சுவை. சூ. 59. வ. 1,3. வன்சுவை. வ. 2,4. நடுநிலைச்சுவை. சூ. 60
சுவையவிநயம். ப. 433. இலக்கணம் சூ. 243-252
சுவைவிளக்கம். ப. 325. அவிநயச் சால்பு,களன், காலம், சூ.56. சுவையிணைதல். சூ. 57
சூத்திரதாரன். ப. 398. இலக்கணம் சூ. 180. வேறு பெயர் தாபகன் சூ. 180
செய்யுள். ப. 330. இலக்கணம் சூ. 67. காரணப்பெயர் சூ. 68.
செய்யுளியக்கம். ப. 331. முதனடை சூ. 69. வ. 1 வாரம். வ-2. கூடை. வ-3. திரள். வ-4.
செயற்பொருத்தம். ப. 329. இலக்கணம் சூ. 64
சேடன். ப. 352. இலக்கணம் சூ. 100
தலைமக்கள். ப. 346. இலக்கணம் சூ. 83. வகை சூ. 84
தலைவர். ப. 346. இலக்கணம் சூ. 85. வகை, சூ. 86,91
தலைவற்குற்றோர். ப. 350. இலக்கணம் சூ. 94. வ. 7-8. அமைச்சன் வ-2. ஆசான் வ-8. குலகுரு முனிவர் வ- 3. விதூடகன் வ-4. விடன்
தலைவியர் ப. 352. இலக்கணம் சூ. 101, 102. வகை சூ. 103-108
தாபகன். ப 398. இலக்கணம் சூ 181
திணைநிலைவரி. ப. 338 இலக்கணம் சூ 77 வ. 18-19
திருக்கதிநம். ப. 384. இலக்கணம் சூ. 150 பிறர்கோள் சூ. 151
தீப்பொருளிறுதி. ப. 360. இலக்கணம் சூ. 112
தீரசாந்தன். ப. 348. இலக்கணம் சூ.58
தீரலலிதன். ப. 348. இலக்கணம் சூ.90
தீரோதாத்தன். ப. 347. இலக்கணம் சூ. 87
தீரோத்ததன்.ப. 348. இலக்கணம் சூ.86
துய்த்தல். ப. 303. இலக்கணம் சூ. 37
துரோடகம். ப. 376. இலக்கணம் சூ. 139
துன்மல்லிகை. ப. 386. இலக்கணம் சூ. 154
தேர்ச்சிவரி. ப. 416. இலக்கணம்சூ. 212
நகை. ப. 313. இலக்கணம் சூ. 44 - 45
நகைக்கூத்து. ப. 410. இலக்கணம் சூ. 203 - 204
நகையவிநயம். ப. 435. இலக்கணம்சூ. 245
நடாத்துநர். ப. 397. இலக்கணம் 177. யாவர் ? சூ. 182
நடி. ப. 398. இலக்கணம் சூ. 182
நடிப்பியல்பு.ப.424-463 இலக்கணம் சூ. 224 வ.1-2. பொதுபொருள் சூ. 224 வ. 3-9 சேடன், வ-5. தண்டத் தலைவன் வ-6. தூதர். வ-6
நடிப்பியல்புபுறனடை. ப. 462. இலக்கணம் சூ. 271
நடிப்போர் குறிப்பு. ப. 345 இலக்கணம் சூ. 70
நடை. ப. 329. இலக்கணம் சூ. 65 வ-1. வகை. வ. 2-3
நயநிலைப்படலம். ப. 369. இலக்கணம் சூ. 159
நற்பொருளிறுதி. ப. 360 இலக்கணம்சூ. 111
நாடகசாலை.ப.451 இலக்கணம் சூ. 263 வ. 1-12 பொதுபொருள் வ. 12-15
நாடகக்கர்ப்பியம். ப. 391 இலக்கணம் சூ. 164
நாடகநூல்.ப. 390. இலக்கணம் சூ. 163
நாடகமியற்றமிழாமாறு. ப 363 இலக்கணம் சூ. 116
நாடகம். ப. 367. இலக்கணம்சூ. 123 124
நாடிகை. ப. 376. இலக்கணம் சூ. 138
நாட்டியாரசகம். ப. 378 இலக்கணம் சூ 142.

நாலேழ்நலன். ப. 353 இலக்கணம் சூ. 102
நாற்பொருள். ப. 294. இலக்கண வகை சூ. 20. வேறு பெயர் சூ. 21 பற்றோள் சூ. 27
நிலைக்கருத்து. ப. 323. சுவையின் வேறு பெயர் சூ. 54
நிலை. ப. 448 இலக்கணம் சூ. 257 வகை சூ. 258, 260 உரிமை சூ. 259
நிலைமெய்ப்பாடு. ப. 426. இலக்கணம் சூ. 227
நிலைவரி. ப. 338. இலக்கணம் சூ. 77 வ. 10-14
நூல். ப. 289 இலக்கணம் சூ. 10 வ. 4. பொதி பொருள் வ.4-6
நூற்புறனடை. ப. 463 இலக்கணம் சூ. 272
நேபத்தியம். ப. 454 இலக்கணம் சூ. 264. வேறு பெயர் பாசறை சூ. 265
படைப்புவரி. 339. இலக்கணம் சூ. 77. வ. 32-35
பதாகைநிலை. ப. 361. இலக்கணம் சூ. 113. வகை. சூ. 114
பரதநாட்டியம். ப. 408. இலக்கணம் சூ. 201
பரதவாக்கியம். ப. 421. இலக்கணம் சூ. 220
பர்ணம். ப. 368. இலக்கணம் சூ. 126
பாணிகை. ப. 388. இலக்கணம் சூ. 157
பாத்திரச்சிறப்பியல்பு. ப. 363. இலக்கணம் சூ. 115
பாத்திரம். ப. 345. இலக்கணம் சூ. 81. வகை. சூ. 82
பாயிரம். ப. 283. வாழ்த்து. ப. 283. விநாயகர். ப. 284. சூ. 1. முருகக் கடவுள். ப. 284. சூ. 2. நாமகள் ப. 285. சூ. 3. நடராசர். ப. 285. சூ. 4. ஞானகுரு. ப. 285. சூ. 5. தமிழ் வித்யாகுரு. ப. 286. சூ. 6. அவையடக்கம். ப. 286. சூ. 7. இந்நூலியற்றற் காரணம். ப. 287. சூ. 8. ஆக்கியோன் பெயர் ப. 288. சூ. 9.
பாரதி. ப. 394. இலக்கணம் சூ. 172.
பிரகசனம் ப. 373. இலக்கணம் சூ. 134.
பிரகர்ணம் ப. 368. இலக்கணம் சூ.125
பிரகரணி. ப. 386. இலக்கணம் சூ. 155
பிரத்தானம். ப. 379. இலக்கணம் சூ. 143.
பிரதிமுகம். ப. 301. இலக்கணம் சூ. 34
பிராயணர் (வகுப்பு) ப. 298 இலக்கணம் சூ. 28.
பிரேங்கணம். ப. 381. இலக்கணம் சூ. 147
பிறநலவர். ப. 349. இலக்கணம் சூ. 91-100. உபநாயகன் சூ. 91 - வ 2. பீடமர்த்தன். சூ. 91. வ. 2
பின்னுரை ப. 420. இலக்கணம் சூ. 217 -218. விலக்கு. 219.
பீடமர்த்தன். ப. 349. இலக்கணம் சூ. 93. வ. 2-4 இலக்கியம் சுக்கிரீவன். வ - 1
புறக்கூற்று. ப. 406. இலக்கணம் சூ. 196.
புறவரி ப. 415. இலக்கணம் சூ. 210
புனைந்துரை. ப. 293. இலக்கணம் சூ. 16
புனைவுமுறை. ப.423. இலக்கணம் சூ.222
பெயரீடு. ப. 422. வகை. சூ. 221
பெருமிதத்தவிநயம். ப. 435. இலக்கணம் சூ. 244
பெருமிதம். ப. 311. வகை. சூ. 43
பொதுமெய்ப்பாடு. ப. 426. இலக்கணம் சூ. 228
பொதுவியல்பு. ப. 290-364 பொதி பொருள். சூ. 11
பொதுவியல்பு புறனடை. ப. 364 இலக்கணம் சூ. 117
பொய்யுரை. ப. 292. இலக்கணம் சூ. 14
பொருத்தம். ப. 327. இலக்கணம் சூ. 61. வ. 1, வகை சூ. 61, வ-2-3.
பொருள். (நாற்பொருள்) ப. 296. இலக்கணம் சூ. 23
மயங்குதிணைநிலைவரி. ப.338. இலக்கணம் சூ. 77. வ. 20. 21
மாநாடகம். ப. 389. இலக்கணம் சூ. 161
முகம். ப. 300. இலக்கணம் சூ. 33
முகமில்வரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 29-31
முகமுடைவரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 6-28
முதலிடைகடைக்கூத்துக்கள். ப. 419. இலக்கணம். சூ. 215
முந்நாடகம். ப. 390. இலக்கணம் சூ.162
முரிவரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 15-17
முன்னிலைக்கூற்று. ப. 406. இலக்கணம் சூ. 197
முன்னுரை. ப. 399. இலக்கணம் சூ. 183
மெய்ப்பாடு.ப.425. இலக்கணம் சூ. 225
மெய்யுரை. ப. 293. இலக்கணம் சூ. 15

யாற்றுவரி. ப. 338. இலக்கணம் சூ. 77. வ. 1-3
யோனி. ப. 293. இலக்கணம் சூ. 17. வேறு பெயர்ஒளி சூ. 18. வகைப்படுத்தல். சூ. 19
வதுப்பு. ப. 298 இலக்கணம் சூ. 28-31
வணிகர். (வகுப்பு) ப. 299. இலக்கணம் சூ. 30.
வரிக்கூத்து. ப. 411. இலக்ககணம் சூ. 205. வகை சூ. 206 வரிப்பாட்டு. ப. 336. இலக்கணம் சூ. 76. வகை சூ. 77
வாசகம். ப. 330. இலக்கணம் சூ. 66
வாசிகம். ப. 432. இலக்கணம் சூ. 238.
வாழ்த்து. ப. 396. இலக்கணம் சூ. 175, 176
விட்புலக்கூற்று. ப. 406. இலக்கணம் சூ. 198.
விடன். ப. 352. இலக்கணம் சூ. 99
விதூடகன். ப. 351. இலக்கணம் சூ. 96. விலக்கு சூ. 98
வியப்பு. ப. 317. இலக்கணம் சூ. 49.
வியப்பவிநயம். ப. 437. இலக்கணம் சூ. 248.
வியாயோகம். ப. 369. இலக்கணம் சூ. 127
விருத்தி. ப. 391. இலக்கணம் சூ. 167. வகை. சூ. 168.
விலாசிகை. ப. 385. இலக்கணம். சூ. 153
விளைவு. ப. 303. இலக்கணம்சூ. 36
விறல். ப. 426. இலக்கணம் சூ. 229. வகை சூ. 230-232
வீடு. (நாற்பொருள்) ப. 298. இலக்கணம் சூ. 26.
வீதி. ப. 372. இலக்கணம் சூ. 133.
வெதுளி. ப. 316. இலக்கணம் சூ. 48
வெதுளியவிநயம். ப. 437 இலக்கணம் சூ. 247
வேறுதலைவியர்வகை. ப. 358 இலக்கணம் சூ. 108
வேளாளர் (வகுப்பு) ப. 299. இலக்கணம் சூ. 31

சூத்திர முதற் குறிப் பகராதி

முதற் குறிப்பு.	பக்கம்.
அஃதே, ஆங்கிகம்	432
அகப்பொருட்கருத்தி	336
அங்கநான்கிற்றாய்	370
அங்கந்தொடங்குமு	403
அங்கமொன்றனு	377
அச்சவவிநய	439
அணங்கேவிலங்கே	321
அதுதான், நற்பொரு	359
அதுதான், நிலையும்	425
அதுதான், மெய்ம்மயிர்	427
அதுவே, நிற்ற	448
அந்தணன்வணிக	368
அரங்கினினிகழ	461
அரசமரபின	414
அரசனீதியு	296
அரண்மனைக்காவ	350
அவர்தாஞ்சூத்திர	397
அவர்தாம், அசுரர்	346
அவலச்சுவைத்தா	371
அவலத்தவிய	439
அவலமோகை	383
அவற்றுள், எல்லா	449
அவற்றுள்முன்னது	294
அவற்றை, ஆக்கம்	292
அவைதாம், அகந்தை	440
அவைதாம், சாத்து	392
அவைதாம், நாடகம்	366
அவைதாம், மக்கட்	294
அறம்பொருளாக	392
அறம்பொருளின்ப	298
அறம்பொருளின்பம்	294
அன்புகாரணமாத்	416
அன்றியும், நாடக	366
ஆடகமன்றினு	285
ஆடல்பாட	393
ஆதியினியன்ற	287
இஃதனுபல்லவி	336
இசைப்பப்போதந்	415
இடைப்பொருளுடனே	299
இதனை, நாடகச்	404
இதனைப்பாசறை	456
இந்நால்வகைய	433
இம்மையிற்பாத்திர	423
இயற்கைநிலையு	353
இரதியென்ப	326
இராமற்குற்ற	349
இருந்திசைக்கோல	450
இவற்றையிலாசிய	451

முதற் குறிப்பு	பக்கம்
இவ்வயிற்கூறிய	460
இவ்விரைவிகய	447
இழிப்பினவிகய	438
இழுமெனுமோசையி	338
இளிவிழவைசவு	319
இன்பசுவைமுழு	385
இன்பமுமறிவு	289
இன்னிசைப்பாட்டு	378
இன்னிதழ்சுவைத்த	447
இன்னும்விரிப்பிற்	440
ஈண்டுக்கூறிய	351
ஈண்டைச்சுவைசில	326
ஈதிதனியல்பென்	395
உடலைப்பற்றி	432
உடனுறையின்பம்	308
உடைவேற்றுமையி	433
உண்மையாயுலகி	293
உபசாதியாகிய	375
உபநாயகன்று	349
உரனும்வீரமு	348
உரிமையோடரச	461
உருவுமொழுக்கமு	347
உவகைச்சுவையி	434
உவகைச்சுவையினுக்	325
உவகையுநகையு	369
உவகையுமவலமு	326
உவமையும்பொருளு	365
உழுவலன்புமா	309
உளத்தேர்மெஞ்சென்	297
உள்ளோன்றலைவனு	293
உறுப்பறைகுடிகோ	316
உறுப்பியல்பென்ப	395
உறுப்பினின்றும்	372
உற்றகாற்பொருளு	298
உற்றுநோக்குழிச்	363
ஊழ்வலியுரைத்த	298
ஊழ்வலியுரைத்தலு	298
எடுத்ததன்மைக்	431
எடுத்துரைகதைதா	300
எடுத்துரைகதையி	359
எதிர்பாராவண	361
எத்தகையோரையு	357
எல்லாந்தானு	396
ஏவரையேனு	410
எழுவரேயெண்மரே	409
எள்ளல்பலகைமை	313
ஐந்திற்குறையா	367
ஐந்தேபாத்திர	382
ஒருநாடகத்தி	389
ஒருபாத்திரமே	372
ஒருபெருவிடயத்	390
ஒருவருய்ப்ப	415
ஒரேதொடைப்பட்ட	405
ஒலிவேறுபாட்டினுங்	432
ஒவ்வொன்றின்கணு	376
ஒளிமிக்கபாத்திரங்	346
ஒளியுமலர்ச்சியு	346
ஒளியும்யோனியு	294
ஒன்பான்சுவையு	367
ஒன்பான்சுவையினு	433
ஒன்றுமுதலாப்	403
ஓதியநிலையை	449
ஓரங்கமேவி	368
தொரூர்க்க	357
கட்புலனின்றச	406
கண்கூடுவரியே	412
கண்ணினுஞ்செவியினுங்	447
கதைநிகழ்ச்சியினிற்	351
கதைமெய்யுரையாக்	384
கதையினிகழ்ச்சியிற்	345
கதையினைப்பெய்து	329
கதையினையாதல்	401
கதையின்றலைவனும்	431
கதையெனப்படுவது	292
கமழுறுவெட்சி	284
கலைஞர்நிரம்பிய	286
கல்விதரக	311
கவிகூற்றினிடையே	391
கவிகூற்றென்பது	345
களத்துறுபவரு	406
களவிறுதியினெனாங்	404
காணுநர்வேட்ட	462
காண்போர்மனத்தைக்	424
காதலிற்றோன்றுங்	413
காய்த்தகதிரினை	303
காரணகாரிய	329
காவலரையறைக்	304
கீர்த்தனந்தானு	336
கீழ்மக்களியல்பிற்	332
குதித்தாடுறுவது	408
குறமும்பள்ளுங்	391
குறையுறவெளியேங்	423
கூத்துக்கூறு	420
கூற்றெனப்படுவது	405
கைக்கிளையன்பி	296
கைசிகிவிருத்தி	376
கையாறெய்துபு	417
சமநிலைநகையிவை	385

முதற் குறிப்பு	பக்கம்
சமநிலையவிநயஞ்	436
சமநிலையொழிசுவை	299
சவனிகைப்பெயரிய	377
சற்குணஞ்சான்ற	356
சாதியென்பது	365
சாதிவகையினு	374
சிந்துமானந்தக்	343
சிறந்தனசில்பொருள்	364
சிறப்பியல்பமைதி	365
சுகுணை தலைவியு	380
சுவையேகுறிப்பு	429
சுவையைமேன்மே	325
சூத்திரதாரனுஞ்	420
சொல்லியவன்றியும்	462
சொற்றநடியே	398
தகவுறுதலைவனுஞ்	388
தயைபொறைதயங்கு	315
தலைமக்கடமது	422
தலைவற்குற்றூர்	350
தலைவன்றீரோ	380
தலைவியர்தாமுஞ்	356
தனித்தனிவேறெணத்	369
தாளவியல்பொடு	411
தானேதனக்குரை	405
திருமொழியெடுத்து	384
தீப்பொருளிறுதி	360
தீரோதாத்தன்	347
தொழில்பிறிதாக	387
தோற்றுவாய்ச்செய்தலாச்	402
நகைச்சுவையவிநய	435
நகையெனப்படுவ	314
நடியுநடனு	397
நடித்துக்காட்டு	390
நல்லொழுக்கத்தை	295
நற்கலைத்தேர்ச்சியு	352
நாடகசாலையின்பு	454
நாடகசாலையின்மு	456
நாடகசாலை	430
நாடகத்தலைவ	360
நாடகத்தி	386
நாடகத்திற்கெழ	391
நாடகத்தெங்கணு	361
நாடகநீதியை	420
நாடகநூலு	323
நாடகந்தன்னைநடித்	397
நாடகந்தன்னைநன்	398
நாடகப்புலவ	345
நாடகப்பேருறுப்	403
நாடகமுடிவி	421
நாடிகைதுரோடகங்	375
நாலேழ்நலனு	352
நால்வகைப்பதாகை	389
நால்வர்தலைவியர்	380
நாற்றுமுதலாக்	302
நிலனிகர்பொறையு	348
நிலையெனப்படுவது	448
நுகரத்தகுவ	426
நுகர்ச்சியுள்ளளவு	426
பகருமோரிடத்தினே	404
பகர்ந்தசாதியுட்	388
பண்ணுந்திறமும்	333
பண்ணொடுகலந்து	331
பயனின்றுபல்காற்	328
பருநகர்நாப்பட்	451
பல்லவியோடனு	336
பல்வகைச்சுவையினும்	426
பல்வகைத்தாதுவி	330
பல்வகைப்பட்ட	379
பழையனகழிதலும்	463
பன்னியசேடன்	352
பாத்திரங்கட்கெலாம்	346
பாத்திரச்சிறப்பியல்	363
பாரியலும்பைந்	288
பாவனைசான்ற	408
பார்வைக்கூத்தினுட்	398
பிரிந்துறைபோழ்தித்	416
பின்னுரையெடுத்துப்	427
புகன்றநாற்றலைவரு	341
புதுமைபெருமை	319
புலங்களிற்பற்றறப்	315
புலவன்கூற்றிற்	391
புலனேசெல்வம்	306
புறக்கூற்றென்பது	406
பூவளர்கொன்றைப்	284
பெரியோர்தலைவரா	389
பெருமிதஞ்சமநிலை	299
பெருமிதத்தவிநயம்	435
பேசுந்தமிழிற்	330
பொதுவியல்பென்பது	290
பொய்யுரையென்பது	292
பொருத்தமென்ப	327
பொருந்துறுமாசை	321
பொருளும்பொறியும்	428
பொருள்பொருளாகப்	393
பொறுமைசான்ற	357
மடந்தைதெரிவை	358
மந்திரமாநகரிற்	286
மற்போர்விற்போர்	381

முதற் குறிப்பு	பக்கம்	முதற் குறிப்பு	பக்கம்
மற்றையகுணத்தினும்	348	மெய்க்கட்பட்டு	425
மனவேறுபாட்டின்	433	மெய்யுரைதன்னொடு	293
மனனிகழ்பெற்றி	305	மென்சுவைப்பாலவும்	327
மாணமர்ஞான	285	வரிப்பாட்டும்மிசைப்	336
மானெனமருளு	371	வரியெனப்படுவது	411
மிகவுந்தாழ்ந்து	331	வருகெனவந்து	413
முதலிடைகடையெனு	417	வாழ்த்துக்கூறுவோன்	397
முந்தைநற்றவத்தி	285	வாழ்த்துநடாத்துநர்	402
முளைத்தன்முதலா	301	விடன்றனிலீலை	386
முற்படக்கிளத்து	399	வியப்பினவிநயம்	437
முற்றிநின்ற	303	வியப்புமொழிநிலை	407
முனிவர்தேவர்	373	வீணைகாலநீட்	328
முன்னைமூன்றும்	394	வெகுளியவிநயம்	437
மூப்பேபிணியே	318	வேறுபாத்திரம்	351

மேற்கோள் செய்யுட் முதற் குறிப் பகராதி

(உரையாசிரியர் எடுத்தாண்டவை)

முதற் குறிப்பு.	பக்கம்.	முதற் குறிப்பு	பக்கம்
அக்கோலேழகன்	458	இருநிலமாந்தர்க்	315
அக்கோவொருகோ	458	இருந்திசைக்கோலம்	378
அகழ்வாரைத்	348	இவற்றையிலாகிய	379
அடையல்குருகே	343	இன்பமொடுபுணர்ந்	443
அதுலகித்யாநந்த	364	இன்பவனப்பு	341
அந்தணரென்போ	437	இன்றுயிலுணர்ந்தோ	444
அம்மேயுன்செங்கை	344	உச்சிப்பொழுதின்	445
அம்மேயென்சொலை	343	உண்மைநிலை	320
அரங்கினுயரமு	396,459	உயர்ந்தசமதலத்	334
அரிதரங்கிற்	461	உருட்டுவண்ண	342
அருளென்னு	347	உரையிடையிட்ட	364
அவற்றுள்மாற்று	410	உலகின்உயிர்கள்	400
அவனேதானே	431	உலகெலாநின்	402
அழலணங்குதாம	337	உவந்தோனவிநய	442
அழற்றிறம்பட்டோ	446	உவர்ப்பிற்கலக்க	454
அழுக்காறுடையோ	443	உவமையும்பொருளும	366
அறுவகைநிலையு	448	உழுதுண்டுவாழ்வரே	301
அன்பெனப்படுவது	347	உள்வரிக்கொண்டுந்	414
அன்றிஇன்றி	328	உள்வரிக்கோலத்து	414
ஆகம்பலமருவு	320	உள்வரியென்பது	414
ஆகையின்மாதே	344	உள்ளோர்க்குள்ளது	294
ஆங்கு, ஒருமுக	460	உறையுட்குடிகை	414
ஆடலும்பாடலும்	454	உனதுநாயகன்	363
ஆடன்மறந்திட்	345	ஊடுதல்காமத்திற்	310,355
ஆதிப்பாவிருத்தி	450	எடுத்தவியலு	341
ஆவல்கூர்சுவீ	359	எடுத்துக்கோளை	417
ஆவியோடிலையிற்	313	எடுத்துரைத்த	359
இப்படித்திரும்பி	318	எண்ணியநூலோ	450
இரவிதன்னொளி	332	எண்ணியமூன்று	433